செ.வெ.எண்: 20/2018 நாள்: 09.01.2018

# ஓகி புயலால் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் மற்றும் கிராம்பு பயிர்களுக்கு புதிய வாழ்வாதார திட்டம் மாவட்ட ஆட்சியர் தகவல்

********

கன்னியாகுமரி மாவட்டத்தில் 30.11.2017 அன்று தாக்கிய ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட வாழை, ரப்பர் மற்றும் கிராம்பு பயிர்களுக்கான புதிய வாழ்வாதார திட்டம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஹெக்டேருக்கு ரூ.13500/- வழங்கப்படுகிறது. மேலும் நிவாரணத் தொகையுடன், வாழை விவசாயிகளுக்கு வாழை சாகுபடி மீண்டும் செய்திட சாதாரண ரகங்களுக்கு முதலாமாண்டு ஹெக்டேருக்கு ரூ.26250/-ம், இரண்டாமாண்டு (மறுதாம்பு சாகுபடி) ரூ.8750/-ம் ஆக மொத்தம் ரூ.35000/-ம் வழங்கப்படும். திசுவாழை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிவாரண நிதியான ரூ.13500/-ம் வாழ்வாதார திட்டத்திற்காக முதலாமாண்டு ரூ.37500/-ம் இரண்டாமாண்டு ரூ.12500/-ம்ஆக மொத்தம் ரூ.50000/-ம் கீழ்க்கண்டபடி வழங்கப்படும்.

| வ. எண் | பயிர் | இரகம் | மாநில பேரிடர் மேலாண்மை நிதி (ஹெக்) ரூ. | வாழ்வாதார திட்டம் | | மொத்தம் ரூ |
|---|---|---|---|---|---|---|
| | | | | முதல் வருடம் (ஹெக்) ரூ | இரண்டாம் வருடம் (ஹெக்) ரூ | |
| 1. | வாழை | சாதாரணவாழை | 13500 | 26250 | 8750 | 48500 |
| 2. | வாழை | திசுவாழை | 13500 | 37500 | 12500 | 63500 |

இது போன்று பாதிக்கப்பட்ட ரப்பர் விவசாயிகளுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ரூ.18000/-ம், வாழ்வாதார திட்டத்திற்காக மீண்டும் ரப்பர் நடவு செய்து ஊடுபயிராக வாழை அல்லது அன்னாசி பயிரிட மானியமாக ஹெக்டேருக்கு ரூ.25000/-ம் தமிழக அரசு சிறப்பு நிதி உதவியாக ஹெக்டேருக்கு ரூ.25000/-ம் வழங்கப்படும். மேலும் ரப்பர் தோட்டங்களில் தேனீ வளர்ப்பிற்கு ரூ.32000/-ம் ஆக மொத்தம் ரூ.100000/- பின்வருமாறு வழங்கப்படும்.

| வ. எண் | பயிர் | மாநில மேலாண்மை நிதி ஹெக்டேர் ரூ | வாழ்வாதார திட்டம் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரப்பர் நடவு செய்து வாழை / அன்னாசி ஊடுபயிர் சாகுபடி (ஹெக்) ரூ | தமிழக அரசு சிறப்பு நிதி உதவி (ஹெக்) ரூ | தேனீ வளர்ப்பு / (ஹெக்டேர்) 20 எண்கள் ரூ.1600/- எண் வீதம் ரூ | |
| 1. | ரப்பர் | 18000 | 25000 | 25000 | 32000 | 100000 |

பாதிக்கப்பட்டகிராம்பு விவசாயிகளுக்கு மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஹெக்டேருக்கு ரூ.18000/-ம் புதியதாக கிராம்பு நடும் விவசாயிகளுக்கு தமிழக அரசு சிறப்பு நிதி உதவியாக ரூ.10000/-மாக சேர்ந்து ஹெக்டேருக்கு ரூ.28000/- வழங்கப்படும்.

எனவே இந்த சிறப்பு வாழ்வாதார திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக அந்தந்த வட்டார தோட்டக்கலை அலுவலகத்தினை தொடர்புகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலக தொலைபேசி எண் 04652 279776-ல் தொடர்புகொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஓம்/-சஜ்ஜன்சிங் ரா சவான்
மாவட்ட ஆட்சியர்
நாகர்கோவில்

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்)

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.